
**ஆகஸ்ட் – 17**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் ஒரே மற்றும் உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த துத்தநாக உற்பத்தி நிறுவனமான இந்துஸ்தான் துத்தநாக லிமிடெட், சர்வதேச சுரங்க மற்றும் உலோக சபையில் இணைந்த முதல் இந்திய நிறுவனமாகும்.
- DPIIT மற்றும் Zepto ஆகியவை Zepto Nova எனப்படும் 6 மாத காலத் திட்டத்தின் மூலம் ஆரம்ப கட்ட உற்பத்திப் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
  - இந்த முன்னெடுப்பானது வன்பொருள், இணைய உலகம் (IoT), சரக்குப் பொதிகள் மற்றும் வழிகாட்டுதலுடன் கூடிய நிலையான உற்பத்தி, இந்தியாவின் புத்தொழில்களுக்கான ஆதரவு மற்றும் 100க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்களுக்கான சந்தை அணுகல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தோடா மொழி பாதுகாப்பு




- குர்தாஸ் வாசமல்லி (66), வாய்வழியாக பதிவான பாரம்பரிய ஆவணங்கள் மற்றும் எழுத்தறிவு ஊக்குவிப்பு மூலம் தோடா மொழியைப் பாதுகாக்கும் முயற்சிகளுக்குத் தலைமை தாங்குகிறார்.
- தோடா மொழி என்பது அதற்கென சொந்த எழுத்து வடிவங்கள் இல்லாத மற்றும் நீலகிரி மலைகளில் சில ஆயிரம் மக்களால் பேசப்படுகின்ற ஒரு பூர்வீக-தெற்கு திராவிட மொழியாகும்.
- அழிந்து வரும் மொழிகளின் பாதுகாப்பு மற்றும் காப்புத் திட்டத்துடன் (SPPEL) இணைந்து, தமிழ் எழுத்து வடிவங்களைப் பயன்படுத்தி ஒரு தோடா அடித்தள நூல் ஒன்று உருவாக்கப்பட்டது.
- அழிந்து வரும் இந்திய மொழிகளை ஆவணப்படுத்துவதற்காக கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய இந்திய மொழிகள் நிறுவனம் (CIIL) SPPEL திட்டத்தினை மேற் கொண்டுள்ளது.
- CIIL ஆனது, தோடா போன்ற மொழிகளுக்கான டிஜிட்டல் காப்பகங்கள் மற்றும் அகராதிகளை உருவாக்குவதற்காக ஒலி-ஒளிக் கருவிகள் மற்றும் மொழியியல்

மென்பொருளைப் பயன்படுத்துகிறது.

- சஞ்சிகா வலைத்தளம் தோடா மொழி மாதிரிகள் மற்றும் ஒலிக் கோப்புகளைப் பொது அணுகலுக்காக வழங்குகிறது.

## குறுவை பயிர் சாகுபடி பரப்பளவு 2025

- காவிரி டெல்டா பகுதியானது இந்த ஆண்டு அதன் அதிகபட்ச குறுவை நெல் பயிர் சாகுபடி பரப்பளவை அடைந்துள்ளது.
- ஆகஸ்ட் 10 ஆம் தேதி நிலவரப்படி 6.09 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- டெல்டா பகுதியில் மேற்கொள்ளப்படும் வழக்கமான குறுவை சாகுபடி பரப்பளவு ஆனது 4.4 லட்சம் ஏக்கர் ஆகும்.
- இந்த ஆண்டு சாகுபடியின் பரப்பளவு சாதாரண அளவை விட சுமார் 40 சதவீதம் அதிகமாகும்.
- கடந்த ஆண்டு, டெல்டாவில் குறுவை சாகுபடியின் கீழ் சுமார் 3.88 லட்சம் ஏக்கர் மட்டுமே பயிரிடப்பட்டது.
- இந்த ஆண்டு குறுவை சாகுபடி பரப்பளவு கடந்த ஆண்டை விடத் தோராயமாக 57 சதவீதம் அதிகமாகும்.
- இதற்கு முந்தையதாக பதிவான சாதனைச் சாகுபடி பரப்பு, 2023 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான பயிர் பருவத்தில் பதிவான 5.6 லட்சம் ஏக்கர் பரப்பளவு ஆகும்.
- தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தலா இரண்டு லட்சம் ஏக்கர் பரப்பளவு பதிவாகியுள்ளன.

**Paddy coverage during Kar/Kuruvai Sornavari (KKS) in 2025-26 (in acres)**
Delta (Kuruvai)

| District | 2025 | 2024 |
|---|---|---|
| Cuddalore | 29,363 | 26,488 |
| Tiruchi | 13,170 | 13,086 |
| Ariyalur | 9,196 | 7,054 |
| Thanjavur | 194,283 | 141,385 |
| Nagapattinam | 74,636 | 4,261 |
| Mayiladuthurai | 96,703 | 96,836 |
| Tiruvarur | 191,603 | 98,622 |
| Delta total | 608,954 | 387,733 |

## தூய்மை பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்

- தமிழக அமைச்சரவையானது, ஆகஸ்ட் 14 ஆம் தேதியன்று தூய்மை பணியாளர்களுக்கான 6 நலத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.
- சென்னை மாநகராட்சிக் கழகம் (GCC) தொடங்கி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் இலவச காலை உணவு வழங்கப்படும்.
- பணியின் போது ஏற்படும் விபத்து காரணமான மரணத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையானது 5 லட்சம் ரூபாயிலிருந்து 10 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப் படும்.

- 3.50 லட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு 35% மானியமும், தொழில்முனைவோருக்கு 6% வட்டி மானியமும் வழங்கப்படும்.
- தொழில்முனைவோர் திட்டத்திற்கு ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.
- நகர்ப்புறங்களில் வீடு இல்லாத தொழிலாளர்களுக்கு 3 ஆண்டுகளில் 30,000 வீடுகள் கட்டப் படும்.
- பணியாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி உதவியுடன் விடுதி மற்றும் புத்தகக் கட்டணங்களுக்கான நிதி ஆதரவும் கிடைக்கும்.




## ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று வெளியான புதிய திட்ட அறிவிப்புகள்

- மாநில உரிமைகளை ஆக்கிரமிக்கும் மத்திய அரசுக்குப் பதிலளிக்கும் விதமாக தமிழக முதல்வர் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.
- உண்மையான கூட்டாட்சியை மீட்டெடுக்கவும், மாநில சுயாட்சியைப் பாதுகாக்கவும் அரசியலமைப்பு ரீதியான தீர்வு காண முதல்வர் அழைப்பு விடுத்தார்.
- நல திட்ட அறிவிப்புகள் (9 முக்கிய முன்னெடுப்புகள்):
  - மாற்றுத்திறனாளிகளுக்கான இலவசப் பேருந்து பயணம் ஆனது மலைப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
  - முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவசப் பேருந்து பயணம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
  - தமிழ்நாட்டின் முன்னாள் இராணுவ வீரர்களுக்கான விடுதி 22 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை மாதவரத்தில் கட்டப்பட உள்ளது.
  - பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் கல்லூரி பயிலும் பிள்ளைகளுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பிலான திறன் பயிற்சித் திட்டம்.
  - இரண்டாம் உலகப் போரின் முன்னாள் இராணுவ வீரர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை 15,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
  - சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 22,000 ரூபாயாக உயர்த்தப் பட்டது.

- சுதந்திரப் போராட்ட வீரர்களின் குடும்பங்களுக்கான ஓய்வூதியம் 12,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஓட்டுநர் பள்ளி நிறுவப்படும்.
- இரண்டு பிராந்திய ஓட்டுநர் அகாடமிகள் மற்றும் ஒரு மாநில அளவிலான ஓட்டுநர் அகாடமி தொடங்கப்படும்.




## சுதந்திர தின விருதுகள் 2025



- இந்திய ஒன்றிய முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் K.M. காதர் மொஹிதீன் தகைசால் தமிழர் விருதைப் பெற்றார்.

- இஸ்ரோ தலைவர் V. நாராயணன் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் விருதைப் பெற்றார்.
- அர்ஜுனா விருது பெற்ற துளசிமதி முருகேசன், துணிச்சல் மற்றும் துணிவான நடத்தைக்கான கல்பனா சாவ்லா விருதைப் பெற்றார்.
- சிறந்த புலனாய்வுப் பணி மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்காக, தமிழக அரசு 15 காவல்துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்களை அறிவித்துள்ளது.
- விருது பெற்றவர்களில் காவல் துறை ஆய்வாளர் பூரணி (இணையவெளிக் குற்றப் பிரிவு, சென்னை), காவல் துறை ஆய்வாளர் லதா (மனிதக் கடத்தல் தடுப்பு பிரிவு, சென்னை), மற்றும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் கல்பனா தத் (தஞ்சாவூர் குற்றப் பிரிவு) போன்ற அதிகாரிகள் அடங்குவர்.

# தேசியச் செய்திகள்

## 79வது சுதந்திர தின சிறப்பம்சங்கள்





- பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து 12வது முறையாக செங்கோட்டையில் நாட்டு மக்களிடம் உரையாற்றினார்.
- இந்த ஆண்டு கொண்டாட்டத்தின் கருத்துரு "Naya Bharat" என்பதாகும்
- ஆகஸ்ட் 15 அன்று தொடர்ச்சியாக அதிக உரைகளை நிகழ்த்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் சாதனையை அவர் முறியடித்து வருகிறார்.
- 17 சுதந்திர தின உரைகளை நிகழ்த்திய ஜவஹர்லால் நேருவுக்கு அடுத்தபடியாக அவர் உள்ளார்.
- கடந்த ஆண்டு 78வது சுதந்திர தின உரையின் போதான தனது 98 நிமிட சாதனையை தானே முறியடித்தார்.
- 103 நிமிடங்கள் நீடித்த இந்த உரை, இது வரையில் வழங்கப்படாத நீண்ட உரையாகும்.

என்பதோடு இதன் மூலம் 2047 ஆம் ஆண்டிற்குள் ஒரு மேம்பட்ட இந்தியாவிற்கான ஒரு செயல் திட்டத்தினை முன் வைத்தார்.

- இது இந்திய வரலாற்றில் எந்தவொரு பிரதமரும் ஆற்றிய மிக நீண்ட உரையாகும்.
- இந்தியாவின் முன்னேற்றம் ஆனது தன்னிறைவு, புதுமை மற்றும் குடிமக்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் வலியுறுத்தினார்.
- வர்த்தகர்கள் தங்கள் கடைகளில் உள்நாட்டு/சுதேசித் தயாரிப்புகளை விற்குமாறு பிரதமர் வலியுறுத்தினார்.
- பிற முக்கிய அறிவிப்புகள்:
  - 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியா வளர்ச்சி பெற்ற நாடாக மாறும் என்று பிரதமர் மீண்டும் உறுதிப்படுத்துகிறார்.
  - அடுத்த தலைமுறை வடிவிலான சரக்கு மற்றும் சேவை வரிச் சீர்திருத்தங்கள் 2025 ஆம் ஆண்டு தீபாவளிக்குள் அறிமுகப்படுத்தப்படும்.
  - அனைத்துக் குடிமக்களுக்கும் அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களின் மீதான வரியைக் குறைப்பதை GST மறுசீரமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - பொது நலனுக்காக 280 காலாவதியான சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன அல்லது திருத்தப்பட்டன.
  - மேம்பட்ட பாதுகாப்புத் திறன்களுக்காக சுதர்சன் சக்ரா திட்டம் தொடங்கப்பட்டது.
  - 2035 ஆம் ஆண்டிற்குள் அனைத்து பொது இடங்களும் நாடு தழுவிய பாதுகாப்புக் கவசத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
  - "டம் கம், பர் டம் ஜியாதா" - மலிவு விலையில் ஆனால் உயர்தர தயாரிப்புகளை ஊக்குவித்தல்.

## OCI அட்டை விதிகள் 2025




- இந்திய அரசானது, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டினர் எந்த நுழைவு

இசைவுச் சீட்டும் இல்லாமல் இந்தியாவுக்கு வருகை தர அனுமதிக்கின்ற தனது வெளிநாடு வாழ் இந்தியர்கள் குடியுரிமை (OCI) அட்டை விதிகளை கடுமையாக்கி உள்ளது.

- கடுமையான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டாலோ அல்லது கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ள வழக்குகளில் முறையாக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டாலோ தனிநபர்களின் OCI பதிவு ரத்து செய்யப்படும்.
- இந்தத் துறை அமைச்சகமானது அட்டைகளை ரத்து செய்வதற்கான இரண்டு முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டது:
  - ஒரு OCI அட்டைதாரருக்கு இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறை தண்டனை விதிக்கப்பட்டால், மற்றும்
  - ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனை விதிக்கப்படும் குற்றத்திற்காக அவர்கள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டால்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்தினால் 2005 ஆம் ஆண்டில் OCI அட்டைத் திட்டம் தொடங்கப்பட்டது.
- OCI அட்டைதாரர்கள் இந்தியாவுக்கு வருகை தர பல நுழைவு, பல்நோக்கு வாழ்நாள் அளவிலான நுழைவுச் சீட்டினைப் பெறுகிறார்கள்.
- இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தைப் பொருட்படுத்தாமல் உள்ளூர் காவல் துறையில் பதிவு செய்வதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.
- வேளாண்மை அல்லது தோட்ட நிலத்தின் உரிமையைத் தவிர்த்து, நிதி, பொருளாதாரம் மற்றும் கல்வி விவகாரங்களில் OCI அட்டைதாரர்கள் வெளிநாடு வாழ் இந்தியர்களுடன் சம உரிமையைப் பெறுகிறார்கள்.

## PM-VBRY திட்டம்





- பிரதான் மந்திரி விக்ஸித் பாரத் ரோஜ்கர் யோஜனா (PM-VBRY) திட்டம் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது, இரண்டு ஆண்டுகளில் 3.5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் முறையாக தனியார் துறையில் வேலை வாய்ப்பு தேடுபவர்களுக்கு மத்திய

அரசு 15,000 ரூபாய் வழங்க உள்ளது.

- மேலும் இது புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக முதலாளிகளுக்கு, ஒரு புதிய ஊழியருக்கு மாதத்திற்கு 3000 ரூபாய் வரை வழங்குகிறது.

### இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498-A

- கணவர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது பதிவான 498-A வழக்கை மும்பை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.
- மனைவியின் உடைகள் அல்லது சமையல் குறித்த கருத்துக்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC) 498-A பிரிவின் கீழ் 'மோசமான கொடுமை' என்று கருதப்படாது.
- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498-A ஆனது சிறு குடும்பத் தகராறுகளுக்கு அல்லாமல், மோசமான கொடுமைக்கான சான்றுகள் தேவை.
- பிரிவு 498-A திருமணத்தில் பெண்களுக்கு எதிரான கொடுமையை எதிர்த்துப் போராடுவதற்காக 1983 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது வரதட்சணை துன்புறுத்தல், உடல் மற்றும் மன ரீதியான சித்திரவதை மற்றும் ஒரு பெண்ணை தற்கொலைக்கு தூண்டுதல் அல்லது காயப்படுத்துதல் போன்ற செயல்களை உள்ளடக்கியது.
- குடும்ப வன்முறையிலிருந்துப் பெண்களைப் பாதுகாப்பதையும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதையும் இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் ஆகியவற்றினை விதிக்கிறது.
- இந்தப் பிரிவின் கீழான தண்டனை விகிதங்கள் பல குற்றங்களை விட அதிகமாக சுமார் 18% ஆகும்.





## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### நாசாவின் OCO-2 செயற்கைக்கோள்

- நாசாவின் சுற்றுப்பாதை கார்பன் ஆய்வகம் 2 (OCO-2) செயற்கைக்கோள் ஆனது 2014

ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

- இந்தச் செயற்கைக்கோள் ஆனது $CO_2$ உமிழ்வு கண்காணிப்பு, பயிர்க் கண்காணிப்பு மற்றும் பாரிசு உடன்படிக்கையை ஆதரித்தல் உள்ளிட்ட பருவநிலை மாற்ற ஆராய்ச்சிக்கான முக்கியத் தரவை வழங்குகிறது.
- தொடர்ச்சியான செயல்பாடுகள் இருந்தபோதிலும், OCO-2 மற்றும் OCO-3 கருவிகளுக்கான செயல்பாட்டு நிறுத்த திட்டங்களைத் தயாரிக்குமாறு டிரம்ப் நிர்வாகம் நாசாவிற்கு அறிவுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.
- OCO-2 செயல்பாடு நிறுத்தப்பட்டால் அதனை மீட்பதற்கு எந்த வழியும் இல்லாமல் பூமியின் வளிமண்டலத்தில் எரிந்து விடும் என்பதால் அது முற்றிலும் அழிக்கப்படும்.
- ISS பணி முடியும் வரையில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) OCO-3 செயல்பாடுகளைத் தொடரத் தனியார் நிதியுதவியை பெறுவதற்கான வாய்ப்பினை நாசா ஆராய்ந்து வருகிறது.




## Metop-SGA1 செயற்கைக்கோள்




- Metop இரண்டாம் தலைமுறை நுட்பத்திலான A1 (Metop-SGA1) Metop-SGA1 செயற்கைக்கோள் ஆனது ஐரோப்பாவின் கௌரௌ எனுமிடத்தில் உள்ள விண்வெளி

நிலையத்திலிருந்து Ariane-62 ஏவு கலம் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

- இது இரண்டாம் தலைமுறை நுட்பத்திலான EUMETSAT துருவ அமைப்பின் (EPS-SG) கீழான முதல் செயற்கைக்கோள் ஆகும்.
- இது புவியிலிருந்து 800 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு துருவச் சுற்றுப்பாதையில் இயங்கும்.
- இந்த செயற்கைக்கோள் ஆனது உயர் தெளிவுத்திறன் கொண்ட வானிலை மற்றும் வளிமண்டலத் தரவுகளை சேகரிக்க கோப்பர்நிக்கஸ் சென்டினல்-5 கலத்துடன் சேர்த்து 6 மேம்பட்ட கருவிகளைக் கொண்டுள்ளது.
- மெட்டாப்- SGA1, தீவிர வானிலை நிகழ்வுகளுக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால முன்னறிவிப்புகளையும், முன் எச்சரிக்கைகளையும் மேம்படுத்தும்.
- இந்த செயற்கைக்கோள் பூமியை தினமும் 14 முறை சுற்றி வந்து, பருவநிலை நடவடிக்கை மற்றும் காற்றின் தரக் கண்காணிப்பை ஆதரிக்க உலகளாவியத் தகவல்களை வழங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## மேற்குத் தொடர்ச்சி மலைகளில் நன்னீர் வாழ் நண்டுகள்

- கெகார்சினுசிடே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு புதிய வகை நன்னீர் வாழ் நண்டுகள் கேரளாவில் கண்டறியப்பட்டுள்ளன.
- காசர்கோடு மாவட்டத்தில் உள்ள இராணிபுரம் மலைவாசல் ஸ்தலத்தில் உள்ள ஒரு மலை ஓடையில் காசர்கோடியா ஷீபே என்ற புதிய பேரினம் மற்றும் இனம் கண்டறியப் பட்டது.
- இந்து தெய்வமான வாமனின் பெயரிடப்பட்ட சிறிய அளவிலான இனமான பிலார்டா வாமன், பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள கவி எனுமிடத்தில் உள்ள ஓர் ஓடையில் கண்டறியப்பட்டது.
- இந்த நண்டுகள் அரிதானவை மற்றும் மனித நடவடிக்கைகளால் முதன்மையாக அவற்றின் வாழ்விடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பதால் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.



### பார்த்தீனியம் களைச் செடி ஒழிப்பு

- அசாமில் உள்ள போபிடோரா வனவிலங்கு சரணாலயம் ஆனது அதன் புல்வெளிகளில் இருந்து பார்த்தீனியம் களைச் செடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கையினைத் தொடங்கியது.
- பார்த்தீனியம் ஹிஸ்டெரோபோரஸ் என்பது 70 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து கலப்பு செய்யப்பட கோதுமை இறக்குமதி மூலம் இந்தியாவிற்குள் நுழைந்ததாக கருதப்படும் ஓர் அயல் தாவரமாகும்.
- இந்தத் தாவரமானது பல்லுயிர்ப் பெருக்கத்தை அச்சுறுத்துவதோடு, தோல் ஒவ்வாமை மற்றும் காய்ச்சல் போன்ற சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என்பதோடு மேலும் காண்டாமிருகங்களுக்கான உணவாக உள்ள புற்களின் வளர்ச்சியைக் குறைக்கிறது.




## மாநிலச் செய்திகள்

### புதிய பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்கள் 2025



- மகாராஷ்டிரா மற்றும் அசாம் மாநிலங்களில் இரண்டு பாதுகாப்புத் தொழில்துறை வழித் தடங்களை நிறுவ இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் தற்போதுள்ள இரண்டு வழித் தடங்களைப் பின்பற்றி இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட உள்ளது.
- உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் ஆத்மநிர்பர் பாரத் (தன்னிறைவு இந்தியா) நிலையினை அடைவதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் வருடாந்திரப் பாதுகாப்பு உற்பத்தி 2024–25 ஆம் நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு 1,50,590 கோடி ரூபாயை எட்டியது.

## காளைச் சண்டையை சட்டப்பூர்வமாக்குதல்




- பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த கோவா சட்டமன்ற உறுப்பினர்கள், அதன் கலாச்சார முக்கியத்துவத்தைக் காரணம் காட்டி, காளைச் சண்டைக்குச் சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கக் கோரியுள்ளனர்.
- இது அங்கு திரியோ என்று அழைக்கப்படுகிறது.
- கோவாவில் நடத்தப்படும் காளைச் சண்டையில் மனிதர்கள் பங்கேற்காமல் இரண்டு பயிற்சி பெற்ற காளைகள் அவற்றின் கொம்புகளைக் கொண்டு மோதிக் கொள்கின்றன.
- ஒரு காலத்தில் தேவாலயத் திருவிழாக்கள் மற்றும் அறுவடைக் கொண்டாட்டங்களின் போது இந்த நிகழ்வுகள் நடத்தப்படுவது வழக்கமாக இருந்தன.
- கோவாவில் உள்ள மும்பை உயர்நீதிமன்றம் ஆனது 1996 ஆம் ஆண்டு விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் காளைச் சண்டைகளைத் தடை செய்தாலும், இந்த நடைமுறை இரகசியமாகத் தொடர்கிறது.
- இந்தச் சண்டைகளின் போது காளைகள் மற்றும் மனிதர்கள் இறக்கும் சமீபத்திய பதிவுகள் மற்றும் சட்டவிரோதப் பந்தயம் அதிகரிப்பது போன்றவை இதன் சட்டப் பூர்வமாக்கல் மற்றும் பாதுகாப்பு குறித்த விவாதத்தை மீண்டும் தோற்றுவித்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★